Memenuhi segala keperluan bekalan air anda
*Meeting all your water supply needs*

PBA Holdings Bhd
200001012513 (515119-U)

26.6.2025

**ஊடக வெளியீடு 2:** PBA ஹோல்டிங்க்ஸ் பெர்ஹாட் (PBAHB)– 25**ஆம் ஆண்டு பொதுக்குழு கூட்டம்**

**YAB TUAN CHOW KON YEOW**
Chief Minister of Penang and Chairman, PBAHB and PBAPP.

**PBAHB 2024: புதிய சாதனைகள் - இறுதி ஈவுத்தொகையாக 2.25 சென் அறிவிப்பு**

பினாங்கு, வியாழக்கிழமை, 26.6.2025 -
PBA ஹோல்டிங்க்ஸ் பெர்ஹாட் தனது 25-வது ஆண்டு பொதுக் கூட்டத்தில், ஒரு பங்கிற்கு 2.25 சென் என இறுதி ஈவுத்தொகையாக அறிவித்தது.

பங்குதாரர்களுக்கான ஈவுத்தொகை பெற தகுதியான நாளாக 15.7.2025 என நிர்ணயம் செய்யப்பட்டது. 7,157 பங்குதாரர்களுக்கு 1.8.2025 அன்று செலுத்தவுள்ள மொத்த தொகை ரிம7.5 மில்லியன் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

2025ம் ஆண்டு, PBAHB தொடர்ந்து 24ஆவது ஆண்டாக பங்குதாரர்களுக்கு ஈவுத்தொகை வழங்கும் வரலாற்று சிறப்புமிக்க ஆண்டாகும்.

**3 புதிய சாதனைகள்**

2024ஆம் ஆண்டு, PBA ஹோல்டிங்ஸ் பெர்ஹாட் மற்றும் அதன் துணை நிறுவனமான பினாங்கு நீர் விநியோக வாரியம்(PBAPP) ஆகியவை பாராட்டுக்குரிய புதிய சாதனைகளைப் படைத்துள்ளன.

1. **ரிம144.167 மில்லியன் நிகர லாபம்:** PBA குழும நிறுவனங்களின் 26 ஆண்டுகால வரலாற்றில் மிக உயர்ந்த நிகர லாபம் ஆகும். இந்த சாதனை நிகர லாபமானது 1.2.2024 முதல் செயல்படுத்தப்பட்ட பினாங்கு நீர் விகித மதிப்பாய்விலிருந்து பெறப்பட்டது.

இது ஒரு சிறந்த சாதனை, ஆனால் இது PBAHB இன் கருவூலத்தை நிரப்பவோ அல்லது நிறுவனத்தை வளப்படுத்தவோ உதவாது.

நீர் தற்செயல் திட்டம் 2030 (WCP 2030) இன் கீழ் 6 புதிய நீர் விநியோக உள்கட்டமைப்பு திட்டங்களை நிறைவுச் செய்ய PBAPP சுமார் ரிம2.099 பில்லியனை முதலீடு செய்ய வேண்டும் என்பதை நினைவில் கொள்க.

மேலும், தற்போதுள்ள உள்கட்டமைப்பை மேம்படுத்துவதற்கான PBAPP-இன் திட்டமிடப்பட்ட மூலதனச் செலவு (CAPEX) 2025-ல் ரிம86.8 மில்லியனாகும்.

மேலும், 2024 ஆண்டில் விதிக்கப்பட்ட பினாங்கு நீர் கட்டணம் 2030-க்குள் பினாங்கின் நீர் பிரச்சினைகளைத் தீர்க்கும் திட்டங்களுக்குப் போதுமான நிதியை வழங்க முடியாது.

'நீர் சொத்துடைமை நிர்வாக பெர்ஹாட்' (Pengurusan Aset Air Berhad) அல்லது PAAB, 2 WCP 2030 திட்டங்களுக்கு நீண்டகால குத்தகை ஏற்பாடுகளை வழங்க ஒப்புக்கொண்டாலும், PBAHB மற்றும் PBAPP ஆகியவை அடுத்த சில ஆண்டுகளில் ரிம1 பில்லியனுக்கும் அதிகமாக திரட்டுவதற்கான பிற வழிகளைக் கவனிக்க வேண்டியிருக்கும்.

2. **ஒரு நாளைக்கு சராசரியாக 1,h** அல்லாத நீர் (NRW) சதவீதம் 28% ஆக இருந்த நிலையில், பினாங்கில் மொத்த நீர்ப் பயன்பாடு 870 MLD ஆக பதிவாகியுள்ளது. ஒப்பிடுகையில், 2023 ஆம் ஆண்டில் தேசிய சராசரி NRW 34.6% ஆக இருந்தது.

இருப்பினும், முன்னேற்றத்திற்கு இடமுண்டு. பினாங்கிற்கான NRW புள்ளிவிவரத்தைக் குறைக்கும் நோக்கில் பணியாற்ற PBAPP-க்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

3. **சுத்திகரிக்கப்பட்ட நீர் உற்பத்திக்கான அதிகபட்ச வடிவமைப்பு திறன் 1,726 MLD:** சுங்கை டுவா நீர் சுத்திகரிப்பு நிலையத்தின் (WTP) தொகுப்பு 12A அதிகாரப்பூர்வமாக 20.9.2024 அன்று திறக்கப்பட்டது.

   1,726 MLD நீர் சுத்திகரிப்பு திறன் மற்றும் 1,208 MLD சுத்திகரிக்கப்பட்ட நீர் வெளியீடு ஆகியவற்றைக் கொண்டு, 2024 ஆம் ஆண்டில் 30% நீர் சுத்திகரிப்பு இருப்பு வரம்பை நாங்கள் அடைந்துள்ளோம். 2023 ஆம் ஆண்டில் தேசிய சராசரி 15.3% ஆக இருந்தது.

   அதோடு, பினாங்கு மாநிலம் முழுவதும், குறிப்பாக பினாங்கு தீவில் உள்ள தெற்கு செபராங் பிறை (SPS) மற்றும் தென்மேற்கு மாவட்டம் (DBD) ஆகிய மாவட்டங்களின் இறுதிப்பகுதி (EoL) மற்றும் உயர் மட்ட பகுதிகளுக்கு மேம்படுத்தப்பட்ட சுங்கை டுவா WTP இலிருந்து சுத்திகரிக்கப்பட்ட நீரை சிறப்பாக விநியோகிக்க உதவுவதில் PBAPP உடனடி சவால் எதிர்நோக்குகிறது.

மொத்தத்தில், 2024 ஆம் ஆண்டு பினாங்கில் உள்ள 705,528 நீர் பயனீட்டளர்கள் உட்பட பல்வேறு பங்குதாரர்களின் குழுக்களின் நலனுக்காக PBAHB மற்றும் PBAPP ஆகியவை உறுதியான முடிவுகளை வழங்கிய ஆண்டாகும்.

**கூடுதலான நீர் விநியோகம்**

2030 ஆம் ஆண்டுக்குள் பினாங்கில் நீர் தேவை 1,532 மில்லியன் லிட்டர்களை எட்டக்கூடும் என்று கணிப்புகள் குறிப்பிடுகின்றன. எனவே, 2030 ஆம் ஆண்டுக்குள் PBAPP மாநிலம் முழுவதும் 1,532 மில்லியன் லிட்டர் சுத்திகரிக்கப்பட்ட நீரை தொடர்ந்து உற்பத்தி செய்து வழங்க வேண்டும்.

கூடுதலான நீர் விநியோகம் இல்லாமல்,
தேசிய ரீதியில் பிரமிக்கும் குடும்பத்தை மையமாகக் கொண்ட பசுமை மற்றும் விவேக மாநிலத்தை உருவாக்கும் "பினாங்கு2030" இலக்கை நாம்

அடைய முடியாது. இது குறித்து கருத்தில் கொள்ள வேண்டிய பல முக்கிய காரணிகள் உள்ளன:

- பினாங்கை ஒப்பிடும் போது அது "சிறிய" மாநிலமாகும், அதன் நிலப்பரப்பு 1,158 கி.மீ3 மட்டுமே. PBAPP ஆல் அதிக அணைகளைக் குறிப்பாக பினாங்கு தீவில் கட்ட முடியாது. ஏனெனில், அணைகள் பொதுவாக நீர்ப்பிடிப்புப் பகுதிகளிலிருந்து வரும் மழையால் நிரப்பப்படுகின்றன. துரதிர்ஷ்டவசமாக, நீர்ப்பிடிப்புப் பகுதிகளாகச் செயல்பட பினாங்கில் அதிக வன நிலங்கள் இல்லை.

- பினாங்கின் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் பருவநிலை மாற்றம் மழைப்பொழிவால் பாதித்துள்ளது. 2021 முதல், ஆயிர் ஈத்தாம் அணை மற்றும் தெலுக் பஹாங் அணை 100% நிரப்பப்படவில்லை.

- சுங்கை முடா பினாங்கின் ஒரே ஒரு முதன்மை மூல நீர் வளமாகும். 2024 ஆம் ஆண்டில், PBAPP இந்த ஆற்றியிலிருந்து சராசரியாக 1,018 MLD மூல நீரை எடுக்கிறது.

- 2024, அக்டோபர் மற்றும் நவம்பர் மாதங்களில், கெடா நீர் சுத்திகரிப்பு நிலையங்களில் ஏற்பட்ட சம்வங்களின் நெருக்கடிகளைத் தவிர்க்க PBAPP எதிர் நடவடிக்கைகளைச் செயல்படுத்தியது. ஒவ்வொரு நெருக்கடியும் பினாங்கில் 465,000 நீர் பயனீட்டாளர்களைப் பாதித்திருக்கலாம்.

- "பேராக்-பினாங்கு நீர் திட்டம்" மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இது மத்திய அரசால் மேற்பார்வையிடப்படும் இரு மாநிலங்களுக்கு இடையிலான திட்டம் என்பதை நினைவில் கொள்ளவும். 2030 ஆம் ஆண்டுக்குள் இது செயல்பாட்டுக்கு வருவதை நாம் எதிர்பார்க்கலாம், ஆனால் எதிர்பாராத தாமதத்தை சமாளிக்கவும் நாம் தயாராக வேண்டும்.

PBA HB
PBA Holdings Bhd
200001012513 (515119-U)
Memenuhi segala keperluan bekalan air anda
*Meeting all your water supply needs*

- 2024 ஆம் ஆண்டில், தனிநபர் உள்நாட்டு பயன்பாடு 2023 ஆம் ஆண்டில் ஒரு நாளைக்கு 284 லிட்டர் அல்லது LCD இலிருந்து 2024 இல் 261 LCD ஆகக் குறைந்துள்ளது. இது முதன்மையாக 2024 பினாங்கு நீர் கட்டணங்களை அறிமுகப்படுத்தியதாலும், உள்நாட்டு நீர் பாதுகாப்பை ஊக்குவிப்பதற்கான PBAPP இன் தற்போதைய திட்டத்தால் ஏற்புடையதாக திகழ்கிறது.

  இருப்பினும், 261 LCD என்பது 2023 ஆம் ஆண்டில் தேசிய சராசரியான 228 LCD-ஐ விட இன்னும் அதிகமாக உள்ளது. 2025 ஆம் ஆண்டிற்கு, பினாங்கிற்கு 250 LCD என்ற "யதார்த்தமான" உள்நாட்டு நீர் பயன்பாட்டு இலக்கை PBAPP ஊக்குவிக்கிறது.

அதிகரித்து வரும் நீர் தேவையைப் பூர்த்தி செய்வது, நீர் அபாயங்களைக் குறைப்பது மற்றும் "பேராக்-பினாங்கு நீர் திட்டத்தைச் செயல்படுத்துவது போன்ற அனைத்துப் பொறுப்புகளையும் PBAPP சுமக்கிறது.

2024 ஆம் ஆண்டிற்கான உறுதியான முடிவுகள் PBAPP சரியான பாதையில் செல்வதைக் காட்டுகின்றன. இருப்பினும், 2030 ஆம் ஆண்டுக்குள் பினாங்கில் சிறந்த மற்றும் நிலையான நீர் விநியோக சேவைகளை நோக்கிய நமது இயக்கத்தில் இன்னும் பல குறிப்பிடத்தக்க சாதனைகள் உள்ளன.

நன்றி

---

எழுத்தாக்கம் : Syarifah Nasywa bt Syed Feisal Barakbah
Corporate Communications Unit
மின்னஞ்சல் : syarifah@pba.com.my